# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.184/2023

### அ.சா. 11 (LW 20 )

| **பெயர்** | மலைச்சாமி | **தொழில்** | **சார்பு ஆய்வாளர்** |
|---|---|---|---|
| **த/க பெயர்** | ஜெயசீலன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | **45** |
| **தாலுகா** | | **தேதி** | **19.09.2025.** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1வது எதிரி ஆஜர். 2வது எதிரி இறப்பு

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் மதுவிலக்க அமலாக்க பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் கடந்த 08.06.2023 அன்று 16.30மணிக்கு திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது திண்டுக்கல் சிலுவத்தூர் போஸ்ட், பெத்தைய கவுண்டடன்பட்டி, சிட்டிலிங்கம் மகன் கோபிநாத் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று புகாரின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 224/2023 இதச பிரிவுகள் 302 இதசவாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். பின்பு வாதியின் புகார் அசலையும், முதல் தகவல் அறிக்கையையும் கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1. அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட் காவல்துறை அதிகாரிகளுக்கும் ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். வாதி கொடுத்த புகார் மனு இதுதான். **அது அ.த.சா.8.ஆகும்**. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான். **அது அ.த.சா.ஆ.9. ஆகும்.** காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

திண்டுக்கல் அரசு மருத்து வமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ வழக்குகளில் வருவோர்களை அனுமதிக்கும் போது காவல்நிலையத்திற்கு தகவல் கொடுக்க

வேண்டும் என்றால் சரிதான். அ.சா.1. என்னிடம் புகார் கொடுப்பதற்கு முன்பாக திண்டுக்கல் அரசு மருத்துவ மனையிலிருந்து எனக்கு தகவல் எதுவும் வந்ததா என்றால் வரவில்லை. மாலை 04.30 மணி அளவில் புகார் கொடுத்த போது வரவில்லை. மாலை 05.30 மணிக்குத்தான் வந்தது. அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்க கூடிய வழக்குகளின் புகாரை பதிவு செய்தவுடன் உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களின் குடியிருப்பு நீதிமன்ற வளாகத்திலேயே உள்ளது என்றால் சரிதான். நகர் மேற்கு காவல் நிலையத்திலிருந்து நீதித்துறை நடுவர் எண்.1. நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்றால் சுமார்10 நிமிடத்தில் வந்து விடலாம். முதல் தகவல் அறிக்கை 08.06.2023 அன்று இரவு 10.00 மணிக்கு நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். அசா.1. கோபிநாத் கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சியாவார். புகாரில் இறந்த அழகுபாண்டியும்அ.சா1.கோபிநாத்தும் எத்தனை மணிக்கு வந்தார்கள், எந்தெந்த இடங்களில் வேலை பார்த்தார்கள் என்ற விவரங்கள் புகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகாரில் அ.சா.1. கோபிநாத், அ.சா.2 . ஆகியோர்களின் செல்போனின் எண்கள் புகாரில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் புகார் என்னிடம் கொடுக்கப்படவில்லை என்றாலும் அதன் அடிப்படையில் புகார் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை – இல்லை.**</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.19 19:16:15 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.